10/=

பக்கங்கள் 08

Registered as a Newspaper in Srilanka

# எதிரொலி

Ethiroli

குரல் 02 | அதிர்வு 22 | செவ்வாய்க்கிழமை 22 மே 2018 | ethirolimedia@gmail.com | 021 224 38 18

## மகிந்த அணியோடு 'குரூப் 16' சங்கமம்?

கொழும்பு, மே 22

கூட்டு அரசாங்கத்தில் இருந்து விலகிய, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் 16 நாடாளுமன்ற உறுப்பினர்களும்(குரூப் 16), முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவை நாளை சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளனர்.

நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்து கொண்டுள்ள, இவர்கள், பொதுத் திட்டத்தின் அடிப்படையில் இணைந்து செயற்படுவது குறித்து மகிந்த ராஜபக்சவுடன் பேச்சு 06 ▶



## முள்ளிவாய்க்காலில்

# பல்கலை மாணவர்கள் செய்தது பெருந்தவறு

### சிவாஜிலிங்கம் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், மே 22

"யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலில் நடந்து கொண்ட விதத்தினை அவர்கள் ஒருமுறை மீள்பரிசீலனை செய்வது அவசியம். கறுப்பு உடையை போட்டுக் கொண்டு நினைவேந்தலில் கலந்து கொண்டது மட்டுமே மாணவர்களின் சாதனை" என வடமாகாணசபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் கூறியுள்ளார். 06 ▶

## தெற்கில் இயற்கை கோரத் தாண்டவம்

கொழும்பு, மே 22

கடந்த சில தினங்களாகப் பெய்து வரும் கன மழையால் தென்பகுதியில் பல பிரதேசங்கள் வெள்ள அனர்த்தத்தை எதிர்கொண்டுள்ளன.

இரத்தினபுரி மற்றும் காலி மாவட்டங்களில் அதிகளவான மக்கள் வெள்ளத்தால் 06 ▶

## தீவு வேண்டும் சீனா அடம்பிடிப்பு

கொழும்பு, மே 22

அம்பாந்தோட்டையில் அமைக்கப்பட்ட செயற்கைத் தீவை தம்மிடம் ஒப்படைக்கும் படி சீனா அடம்பிடிப்பதாக, ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கையின் கடன் நெருக்கடியைப் பயன்படுத்தி, அம்பாந்தோட்டை துறைமுகத்தை 99 ஆண்டு குத்தகைக்கு சீனா பெற்றுள்ளது. 06 ▶

## முடிந்தால் செய்யுங்கள்!

### சட்டம் ஒழுங்கு அமைச்சருக்கு சிவாஜிலிங்கம் சவால்

யாழ்ப்பாணம், மே 22

"வடமாகாணசபையின் கொடியை அரைக் கம்பத்தில் பறக்க விடுவதும், தலைகீழாகப் பறக்க விடுவதும் எங்களுடைய பிரச்சினை. அதனை நாங்கள் பார்த்துக் கொள்வோம். அதற்காக நடவடிக்கை எடுக்க முடிந்தால் அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார எடுக்கட்டும் பார்க்கலாம்" என வடமாகாணசபை உறுப்பினர் எம். கே.சிவாஜிலிங்கம் சவால் விடுத்துள்ளார். 06 ▶

## இன்னொரு இரத்தக்களரி

### மகிந்த எச்சரிக்கை

கொழும்பு, மே 22

"வடக்கிலுள்ள சில அரசியல்வாதிகளின் செயல்கள் மற்றும் கருத்துக்கள், இன்னொரு இரத்தக் களரிக்கே வழிவகுக்கும் என்று எச்சரித்துள்ளார்" முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச.

கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்றுக்கு கருத்து வெளியிட்டுள்ள அவர்,

"வடக்கிலுள்ள சில அரசியல்வாதிகளின் செயல்கள் மற்றும் கருத்துக்கள், நாட்டைப் பிளவுபடுத்தும் பரப்புரையின் ஒரு அங்கமாக இருக்கின்றன. அவர்கள் இன்னொரு இரத்தக் களரிக்கே வழிவகுக்கின்றனர். நாட்டை நேசிக்கும் எவரும், அத்தகைய நிலைக்குத் திரும்புவதை விரும்பமாட்டார்கள்.

போரின் போது விடுதலைப் புலிகளுக்குப் பயந்து வடக்கிலுள்ள பெரும்பாலான 06 ▶

## லண்டனில் தமிழ் இளைஞன் வெட்டிக் கொலை



யாழ்ப்பாணம், மே 22

இலங்கையில் இருந்து புலம்பெயர்ந்த தமிழ் இளைஞன் ஒருவர் பிரிட்டனின், தென்மேற்கு லண்டனில் உள்ள, மிட்செம் என்ற பகுதியில் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார். 06 ▶

## மைத்திரி தமிழர்களுக்கு துரோகம் செய்கிறார்

### மாகாண சபை உறுப்பினர் காட்டம்

யாழ்ப்பாணம், மே 22

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தமிழ் மக்களுக்கு நம்பிக்கைத் துரோகம் இழைத்துள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடக்கு மாகாண சபை உறுப்பினர் குகதாஸ் தெரிவித்துள்ளார்.

"கடந்த 2015 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் வடக்கு-கிழக்கு தமிழ் மக்கள் மாற்றத்தை வேண்டி மைத்திரிபால சிறிசேனவுக்கு தமது வாக்குகளை அளித்திருந்தார்கள்.

ஆரம்பத்தில் தன்னை ஒரு மீட்பர் போலக் காட்டிய ஜனாதிபதி தமிழ் மக்களின் வாக்குத்தான் தன்னை காப்பாற்றியது என்றும் இல்லாவிடில் தன்னைக் 06 ▶

## யுத்த மனோநிலையிலேயே இன்னமும் சிங்கள அரசு

### ஜனநாயகப் போராளிகள் பாய்ச்சல்

யாழ்ப்பாணம், மே 22

"சிங்கள தேசம் தன் இறுமாப்பு மிக்க யுத்த மனோபாவத்திலிருந்து இன்னும் மீளவில்லை" என ஜனநாயகப் போராளிகள் கட்சியின் ஊடகப் பேச்சாளர் க.துளசி தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"முள்ளிவாய்க்காலில் பேயாட்டம் ஆடிய சிங்களப் பேரினவாதம் இன்னமும் அது தொடர்பில் நியாயப்பாடுகளை ஏற்படுத்தாமல், பிராயசித்தங்களைத் தேடிக்கொள்ளாமல் காலம் கடத்திவரும் நிலையில், அந்தத் துயரியல் சம்பவத்தின் ஒன்பதாவது ஆண்டு நினைவு நிகழ்வில் அழுதகண்ணீர் காய்வதற்கு முன்னரே மீண்டும் ஒரு 06 ▶

## மதுபான சாலையில் ஒருவர் மர்மச் சாவு

### சடலம் நேற்று மீட்பு



யாழ்ப்பாணம், மே 22

யாழ்ப்பாணம் நகர் இராசாவின் தோட்டம் வீதியிலுள்ள மதுபான நிலையத்திலிருந்து ஆண் ஒருவரின் சடலம் நேற்றுக் காலை மீட்கப்பட்டுள்ளது.

அந்த மதுபான நிலையத்தில் 06 ▶



## மூடாவிட்டால் முற்றுகை!

### சாவகச்சேரியில் பூதாகரமாகும் கொல்களப் பிரச்சினை

யாழ்ப்பாணம், மே 22


தென்மராட்சி பிரதேச செயலக பிரிவில் சாவகச்சேரி நகரிலுள்ள மாட்டிறைச்சி கொல்களத்தை மூடுமாறு வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.

"பசு வதையை ஒழிப்போம்" என்ற கோஷத்துடன் சிவ சேனா அமைப்பின் ஏற்பாட்டில் நேற்று மு.ப. 10 மணியளவில் 06 ▶

## அதிகரிக்கும் விலையேற்றம்:

# அரசைக் கண்டிக்கும் கிளிநொச்சி மக்கள்!







கிளிநொச்சி, மே 22

அரசாங்கத்தால் நாட்டில் சடுதியாக அதிகரிக்கப்பட்டுள்ள பொருட்கள் சேவைகள் மீதான விலையேற்றத்தைக் கண்டித்து, கிளிநொச்சி மக்கள் நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளனர்.

கிளிநொச்சியில் சமத்துவம் சமூக நீதிக்கான மக்கள் அமைப்பின் ஏற்பாட்டில் மேற்கொள்ளப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்தில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார், பொது மக்கள், விவசாயிகள், வியாபாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

கிளிநொச்சி காக்கா கடைச் சந்தியில் இருந்து டிப்போ சந்திவரை ஊர்வலமாகச் சென்று தங்களின் எதிர்ப்பை வெளியிட்டனர்.

இதன்போது, "பொருட்களின் விலையை ஏற்றாதே மக்களின் வயிற்றில் அடிக்காதே", "அரசியல் தீர்வா? விலைவாசி உயர்வா?", "அரசே விலையைக் குறை கூட்டமைப்பே மௌனத்தைக் கலை", "அரசியல் தீர்வுக்குப் பரிசு விலைவாசி உயர்வா?", "உள்ளூர் உற்பத்திக்குச் சந்தையைத் தா வெளிநாட்டு இறக்குமதிக்கு தடையப் போடு", "வேலை வாய்ப்பைத் தா", "விலையேற்றத்தைக் குறை", "விவசாயிகள் பாடு திண்டாட்டம் முதலாளிகள் பாடு கொண்டாட்டம்", "பெருங்கடனில் நாங்கள் கூட்டாட்சி , கொழுத்த ஆட்சியில் நீங்கள்", "நெல்லுக்கு நிர்ணய விலை வேண்டும் விவசாயிகள் நிமிரவேண்டும்", "கடலால் சூழப்பட்ட நாடா? இல்லை கடனால் சூழப்பட்ட நாடா?" போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட சுலோகங்களை ஆர்ப்பாட்டக்காரர்கள் ஏந்தியிருந்தனர்.

இதன்போது வெளியிடப்பட்ட அறிக்கையில், "நாட்டின் பொருளாதாரம், மக்களுடைய வாழ்க்கைத் தரம், சமூகப் பாதுகாப்பு, அரசியல் தீர்வு, அரசியல் கைதிகளின் விடுதலை போன்றவைகளில் முன்னேற்றத்தை ஏற்படுத்த வேண்டிய நல்லாட்சி அரசாங்கம், அவற்றைச் செய்யாமல் விலைவாசியை மட்டும் உயர்த்திக் கொண்டிருக்கிறது. பொறுப்புள்ள எதிர்க் கட்சியாக இருந்து, தட்டிக் கேட்க வேண்டிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசின் இவ்வாறான மக்கள் விரோதச் செயற்பாடுகளுக்குத் துணை போய்க்கொண்டிருக்கிறது. இது வன்மையான கண்டனத்துக்குரியது.

விவசாய உற்பத்தியில் முதல் நிலை வகித்து வந்த கிளிநொச்சி மாவட்டம், இப்போது வறுமையில் முதலிடம் வகிக்கிறது. இந்த நிலையில், கிளிநொச்சி மாவட்ட மக்களை இந்த விலைவாசி உயர்வு கடுமையாகப் பாதித்துள்ளது. அத்துடன், நாடு முழுவதிலும் உள்ள வறிய, நடுத்தர நிலையில் உள்ள மக்களும் இந்த விலைவாசி உயர்வால் பாதிப்புக்குள்ளாகி உள்ளனர். மக்கள் மீது வரிச்சுமைகளையும் விலைவாசி உயர்வையும் தொடர்ந்தும் ஏற்றிக் கொண்டிருப்பதை விடுத்து, நாட்டின் உற்பத்தித்துறையை மேம்படுத்துவதைப்பற்றியே அரசு சிந்திக்க வேண்டும். சர்வதேச நிதி நிறுவனங்கள், பல்தேசியக் கம்பனிகளின் பிடியில் இருந்து மக்களை விடுவிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுப்பது அவசியம். " என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஆ)

## 7 ஆறுகளின் நீர் மட்டம் அதிகரிப்பு

கொழும்பு, மே 22

களனி, களு, நில்வளா, கின், மஹாவலி, அத்தனகளு ஓயா, மற்றும் மஹா ஓயா ஆகிய ஏழு ஆறுகளின் நீர் மட்டம் வேகமாக அதிகரித்துள்ளது. இதனால், இதனை அண்டியுள்ள பிரதேசத்தில் வசிக்கும் மக்களை அவதானத்துடன் செயற்படுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மத்திய மலைநாட்டின் மேற்குப் பகுதியில் கடும் மழை பெய்துவருகின்றது. இதனால், மேல் கொத்மலை நீர்த்தேக்கத்தின் வான்கதவுகள் இரண்டு திறக்கப்பட்டுள்ளன. தொடர்ந்தும் மழை பெய்யும் பட்சத்தில் இந்த நீர்த்தேகத்தின் ஏனைய வான் கதவுகளையும் உடனடியாகத் திறக்கும் நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், கொத்மலை தாழ் நிலபிரதேசத்தின் இருமருங்கிலும் உள்ள மக்களை அவதானத்துடன் செயற்படுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ஆ)

## யாழ்ப்பாணத்தில் திருக்குறள் தேர்வு

யாழ்ப்பாணம், மே 22

யாழ்ப்பாணத்தில் உயர்தரத்தில் தமிழ் கற்கும் மாணவர்களின் நலன் கருதி திருக்குறள் தேர்வு நடைபெற்றது.

யாழ். தமிழ்ச்சங்கத்தால் நடத்தப்பட்ட இந்தத் திருக்குறள் தேர்வு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நேற்றுமுன்தினம் பிற்பகல் இடம்பெற்றது.

இந்தத் தேர்வுக்காக 740 மாணவர்கள் விண்ணப்பித்திருந்தனர். இந்தப் பரீட்சைக்கு 650 பேர் வருகை தந்திருந்தனர்.

தமிழ்ச் சங்க தேர்வு மேற்பார்வை அணியினருடன், கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் ஆசிரிய பயிலுநர்கள் 24 பேர் நோக்குநர்களாக இதில் பங்கேற்றனர்.

தேர்வு ஆரம்பமாவதற்கு முன்னர் அண்மையில் அகாலமரணமடைந்த தமிழாசிரியை கவிதா ஜெயசீலனின் ஆத்ம சாந்திக்காக அனைவரும் இரண்டு நிமிடங்கள் அமைதிப் பிரார்த்தனையில் ஈடுபட்டனர்.

தேர்வு தொடர்பான பெறுபேறுகள் எதிர்வரும் புதன் கிழமைக்கு முன்னர் தமிழ்ச்சங்கத்தின் இணையத் தளத்தில் (www.thamilsangam.org) வெளியிடப்படும் என்று தேர்வு இணைப்பாளர் கு.பாலஷண்முகன் தெரிவித்தார். (ஆ)

# வைரஸ் தொற்றுக்கு சிகிச்சை அளிக்குக!

## அமைச்சர் ராஜித பணிப்பு

கொழும்பு, மே 22



தென்மாகாணத்தில் பரவி வரும் ஒருவகை வைரஸ் தொற்றுக்குள்ளான நோயாளர்களுக்கு, சிகிச்சை அளிப்பதற்குத் தேவையான அனைத்து வசதிகளையும் வழங்குமாறு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், விசேட வைத்திய நிபுணர் அனில் ஜயசிங்ஹவுக்கு சுகாதர போசாக்கு மற்றும் சுதேச வைத்தியத்துறை அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரத்ன பணிப்புரை விடுத்துள்ளார்.

இதன்படி, 10 ஹைஃப்ளோ ஒட்சிசன் இயந்திரங்கள் காலி கரகம்பிட்டிய வைத்தியசாலைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

காலி கராப்பிட்டிய, மாத்தறை, எல்பிட்டிய, கம்புறுப்பிட்டிய, தங்காலை, வலஸ்முல்ல ஆகிய வைத்தியசாலைகளில் சுமார் 600 பேர் இந்த நோய்க்கான சிகிச்சையைப் பெற்று வருகின்றனர். இந்த நோய்த் தொற்றுக்குள்ளாகி 13 பேர் உயிரிழந்துள்ளனர். இன்புளுவென்சா வைரஸ் காரணமாகவே குறித்த நோய் பரவி வருவதாக தெரியவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.(ஆ)

## நடமாடும் பொலிஸ் அலுவலகம்





யாழ்ப்பாணம், மே 22

சுன்னாகம் ஏழாலை தெற்குப் பிரதேசத்தில் கருப்பாவோடை அம்மன் கோவிலுக்கு அருகாமையில் மக்களுக்கு சிறந்த சேவைகளை வழங்கும் பொருட்டு, நடமாடும் பொலிஸ் அலுவலகத்தால் சேவைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

போதைப் பாவனை, களவு போன்றவற்றை கட்டுப்படுத்தும் நோக்கிலேயே இந்தச் சேவைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வில், பொலிஸ் அதிகாரிகள், பிரதேச சபை உறுப்பினர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஆ)

# மின்னல் தாக்கி மீனவர் சாவு!

புத்தளம் , மே 22

புத்தளம் தப்போவ குளத்தில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர் ஒருவர், மின்னல் தாக்கத்துக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார். இந்த அனர்த்தம் நேற்றுமுன் தினம் இடம்பெற்றுள்ளது.

இதனால், தப்போவ- பள்ளியவைச் சேர்ந்த கீத் சத்துரங்க (வயது- 34) என்பவரே உயிரிழந்துள்ளார்.(ஆ)

எதிரொலி
Ethiroli
செவ்வாய், 22 மே 2018 ethirolimedia@gmail.com

# முள்ளிவாய்க்கால் சாபமா?

கடந்த சில வருடங்களாக மே மாதத்தில் ஒரு நிகழ்வு தவறாமல் நடக்கின்றது. தென்னிலங்கையில் ஏற்படும் இயற்கையின் சீற்றமே அது. தென்மேல் பருவக்காற்றால் இப்படி இயற்கை தன் விளையாட்டைக் காட்டுவதாகச் சமாதானம் சொல்லிக் கொண்டாலும், முன்னைய காலங்களில் இல்லாத அனர்த்தங்களை மண் சரிவென்றும், வெள்ளமென்றும் வெவ்வேறு ரூபங்களில் இயற்கை இப்போது நிகழ்த்துவதன் விந்தைதான் பலருக்கும் புரியவில்லை.

ஒரு சாரார் சொல்வது போல, 2009 மேயில் ஒரு சிறு சதுப்பு நிலத்துக்குள் சிக்குண்ட மக்கள் கூட்டத்தை கொரூரமாகக் கொன்றொழித்ததன் சாபமே, இப்படி தென்னிலங்கையைக் கடந்த சில வருடங்களாக இயற்கை அனர்த்தம் என்ற பேரில் பிடித்தாட்டுகின்றது என்பதையும் சில சமயங்களில் நம்பத்தான் வேண்டும் போலிருக்கிறது. இறந்தோரின் சாபங்கள் பற்றிய நம்பிக்கை தமிழர்களை விடவும் சிங்கள மக்களிடம் அதீதமாகவே உண்டு. இறந்து போன புத்தரின் சக்தி தங்களோடு தொடர்ந்திருக்க வேண்டும் என்ற எண்ணத்தில் தான், அவரின் தந்ததாதுவை இன்னமும் தலதா மாளிகையில் வைத்துப் பாதுகாத்து வணங்குகிறார்கள். அத்தோடு புத்தர் என்பவர் போதிசத்துவரின் பல அவதாரங்களில் ஒன்றே எனவும் நம்புகிறார்கள். இறந்தவர்கள் பின்னாட்களில் மறுபிறப்பெடுத்தும், வேறு உடல்களில் புகுந்தும் தங்கள் சாவுக்குக் காரணமானவர்களைப் பழிவாங்கும் ஏராளமான ஜதீகக் கதைகள் பௌத்தர்களிடம் தாராளமாகவே உண்டு.

அதனால் தானோ என்னவோ, மே மாதத்தில் தங்கள் பகுதிகளில் வழமைக்கு மாறான உயிர்ப் பலிகள் இயற்கையால் ஏற்படும் போது, முள்ளிவாய்க்காலோடு பொருத்திப் பார்த்து, அந்தச் சாபத்தின் விளைவாகவே இப்படியான தண்டிப்புகள் தமக்கு நிகழ்வதாகப் பல சிங்கள மக்கள் புலம்புகிறார்கள். ஆயினும், முள்ளிவாய்க்காலில் ஒரு இனம் உதவிக்கு யாருமின்றி, உணவின்றி, மருந்தின்றி, உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கும் போது, பாற்சோறு கொடுத்தும், பட்டாசு வெடித்தும் சிங்கள மக்களைப் போல தமிழ் மக்கள் கொண்டாடி மகிழவில்லை. பாதிப்புற்றவர்களைக் காக்க என்ன வழி என்றுதான் சிந்தித்தார்கள்: சிந்திக்கிறார்கள். அதனால் தான் கடந்த வருடம் தென்னிலங்கை வெள்ளத்தில் மிதந்தபோது, உதவிப் பொருட்களோடு தமிழ் இளைஞர்களும், பொது அமைப்புகளும் விரைந்து சென்று மீட்புப் பணிகளில் குதித்திருந்தார்கள். பாதிக்கப்பட்ட மக்களின் துயர் துடைக்கப் பாடுபட்டார்கள்.

ஆனால் இவ்வளவு நடந்தபின்னும் தென்னிலங்கை ஆளும் வர்க்கத்தின் போக்கில் மட்டும் எவ்வித அசைவுமில்லை. முன்னர் இருந்ததைப் போல அதே மகாவம்சச் சிந்தனையோடுதான் அதன் ஒவ்வொரு நகர்வும் இருக்கிறது. அது மகிந்தவாக இருந்தாலும் சரி, மைத்திரியாக இருந்தாலும் சரி சிங்கள நலன்களுக்காக தமிழர்களின் நலன்களையும், வாழ்வையும் பலி கொடுப்பதாகவே அமைந்துள்ளன. ஒருவேளை, முள்ளிவாய்க்கால் சாபத்தால் தான், மே மாத அனர்த்தங்கள் தென்னிலங்கையில் தொடர்வதாக வைத்துக் கொண்டால், ஆள்வோர் செய்த அட்டூழியங்களுக்காக அப்பாவிகளைத் தண்டித்தல் இயற்கைக்கு தகாது. அப்பாவிகளை விடுத்து ஆள்வோரை ஆட்டுவித்தாலே முள்ளிவாய்க்கால் சாபத்தின் எண்ணம் ஈடேறும்.

"உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்"

# புலிகளின் சொத்துக்களையல்ல: போர் எச்சங்களையே கேட்டோம்

யாழ்ப்பாணம்,மே 22

"தமிழீழ விடுதலைப் புலிகள் போர்க் காலத்தில் கைவிட்டு சென்ற பொருட்களை வடமாகாணசபையிடம் ஒப்படைக்கக்கோரி வடமாகாணசபையில் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றுவதற்கு நான் நடவடிக்கை எடுத்துள்ளதாக சிங்கள ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருக்கின்றன. அவ்வாறான கருத்தை நான் ஒருபோதும் கூறவில்லை" என்று கூறியுள்ளார் வடமாகாணசபை உறுப்பினர் சிவாஜிலிங்கம். "தென்னிலங்கை ஊடகங்கள் எங்களோடு தொடர்பு கொள்ளாமல், சிங்கள மக்கள் மத்தியில் எம்மைக் குறித்தும், வடமாகாணசபை குறித்தும் தவறான எண்ணங்களை விதைக்கும் வகையில் அபாண்டமான பொய்ச் செய்திகளை வெளியிட்டு வருகின்றனர்.

அவ்வாறான செய்தி தொடர்பாக அந்த ஊடகங்கள் என்னிடம் கேட்கவும் இல்லை. இந்நிலையில் நாம் வழங்கிய மறுப்பையும் அவர்கள் நிராகரித்துள்ளார்கள். இது திட்டமிட்டு சிங்கள மக்கள் மத்தியில் எம்மைப் பற்றித் தவறான எண்ணத்தை வளர்க்கும் நோக்கில் சிங்கள ஊடகங்கள் செயற்படுவதையே காட்டுகின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் சொத்துக்களை ஆளாளுக்கு கொள்ளையடித்து விட்டார்கள். இப்போது என்ன இருக்கிறது? மேலும் புலிகளின் சொத்துக்களை நாங்கள் எதற்காகக் கேட்கபோகிறோம்? கேட்டாலும் கொடுப்பார்களா? இவ்வாறான நிலையில் ஊடகங்கள் பொய்யை எழுதிக் கொண்டிருக்கின்றன.

மேலும் முள்ளிவாய்க்கால் இறுதிப்போர் நடைபெற்ற இடத்தில் காணப்படும் போரின் எச்சங்களையே சேகரித்து அடுத்த தலைமுறைக்கு காட்டவேண்டும் என்றே நாங்கள் பேசியிருந்தோம்" என சிவாஜிலிங்கம் மேலும் கூறியுள்ளார். (அ)

# காரைநகரின் அபிவிருத்திக்கு கூட்டமைப்பே முட்டுக்கட்டை

## பழி சுமத்துகிறது ஈ.பி.டி.பி.

யாழ்ப்பாணம்,மே 22

"மக்கள் நலன்சார் திட்டங்களை முன்னெடுப்பதற்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பு இடையூறாகவே இருந்து வருகின்றது" என ஈ.பி.டி.பி.யின் காரைநகர் பிரதேச நிர்வாக செயலாளர் கண்ணன் (ரஜனி) தெரிவித்துள்ளார்.

'மக்களுடன் நாம் மக்களுக்காக நாம்' நிகழ்ச்சியில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"கடந்த காலங்களிலும் சரி, தற்போதும் சரி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே எமது காரைநகர் பிரதேசத்தின் ஆட்சி அதிகாரத்தை மேற்கொண்டுவருகின்றது. ஈ.பி.டி.பியினராகிய நாம் பிரதேச சபையில் எதிர்க்கட்சியாக இருந்துகொண்டு எமது காரைநகர் பிரதேசத்தின் முக்கிய தேவைப்பாடுகளை, மக்கள் அபிவிருத்திக்காக முன்வைத்த பல திட்டங்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மக்களிடம் செல்லவிடாது முடக்கியிருந்தனர்.

நாம் காரைநகர் பிரதேசத்தின் எதிர்க்கட்சியாக இருந்தாலும் அன்று எமது கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா அமைச்சராக இருந்ததன் காரணமாக இப்பகுதியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எதிர்ப்பையும் மீறி இப்பிரதேசத்தின் அடிப்படைத் தேவைகளான குடிநீர், வாழ்வாதாரம் உள்ளிட்ட தேவைப்பாடுகளை நிவர்த்தி செய்து கொடுத்திருக்கின்றோம்.

ஆனால் இன்றும் 16 நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தம்வசம் கொண்டுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் காரைநகர்ப் பகுதியின் அபிவிருத்தியை வெறும் ஊடகச் செய்திக்காக மட்டும் தான் செய்துவருகின்றார்கள்.

தேர்தல் கால வாக்குறுதிகளால் அதிகாரங்களை பெற்றுக்கொள்ளும் இவர்கள் தமிழ் மக்களின் நிம்மதியான வாழ்க்கையிலோ அன்றி நிரந்தரமான அபிவிருத்திக்கான முன்னகர்வுகளிலோ இற்றைவரை அக்கறை செலுத்தியது கிடையாது" என்றும் அவர் தெரிவித்தார். (அ)

# மோசமானவனாக சித்திரிக்க முயற்சி

## ரிஷாத் கவலை

கண்டி, மே 22

முஸ்லிம் சமூகத்தின் விடுதலைக்காகவும், அந்தச் சமூகத்தின் உரிமைக்காகவும் மேற்கொள்ளும் ஒவ்வொரு செயற்பாட்டையும் பெரிதுபடுத்தி, சிங்கள மக்கள் மத்தியில் மோசமானவனாகத் தன்னைக் காட்டுவதற்கு ஒரு சிலர் முயற்சிப்பதாக அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

கண்டி பானகமுவவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள பானகமுவ முஸ்லிம் வித்தியாலயக் கட்டடத் திறப்பு விழா நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"அகில இலங்கைக் காங்கிரஸ் கட்சியின் செயற்பாடுகளைக் கண்டிக்கு கொண்டு வந்து விட வேண்டாம் என என்னைச் சந்தித்த ஒரு சில சகோதரர்கள் கூறினார்கள். இதன்போது, அவர்கள் என்னிடம் சுமார் மூன்று மணித்தியாலங்கள் வரை பேசினார்கள். உங்களைக் கண்டால் சிங்கள மக்கள் எங்களை அடிப்பார்கள் என்றும், உங்களை ஓர் இனவாதியாகவும், சிங்கள மக்களின் விரோதியாகவும் பார்க்கிறார்கள் எனவும் அவர்கள் தெரிவித்தனர். அவர்கள் கூறிய விடயங்கள் என்னை அதிர்ச்சி அடையச் செய்தன. சிங்கள மக்களுடைய மனதில் இவ்வாறான இனவிரோதக் கருத்துக்களை முளைக்கச் செய்வது கண்டனத்துக்குரியதாகும்." என்றும் அவர் தெரிவித்தார். (ஆ)

# மாடு மேய்த்தவர் பிணமாக மீட்பு

வவுனியா,மே 22

வவுனியா, சிதம்பரபுரம் பகுதியில் மாடு மேய்க்க சென்ற குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

வவுனியா, சிதம்பரபுரம் கற்குளம் பகுதியைச் சேர்ந்த நாகன் கோணாமலை (64 வயது) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

இவர் நேற்றுமுன்தினம் மாலை 4.30 மணியளவில் கற்குளத்திலுள்ள தனது வீட்டிலிருந்து மாடு மேய்ப்பதற்காக வெளியில் சென்றுள்ளார். எனினும் நீண்ட நேரமாகியும் அவர் வீடு திரும்பாததையடுத்து வீட்டார் அருகிலிருந்தவர்களின் உதவியுடன் தேடிச் சென்றுள்ளனர். இதன் போது இரவு 8 மணியளவில் குறித்த பகுதியில் அவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலம் பிரேத பரிசோதனைக்காக வவுனியா பொதுவைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. சிதம்பரபுரம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (அ)

# ஹோட்டல் முரண்பாடு நேற்றும் போராட்டம்

யாழ்ப்பாணம்,மே 22

யாழ்ப்பாணம் ஒஸ்மானியாக் கல்லூரிக்கு அண்மையாக ஹலீமா வீதியில் ஹோட்டல் அமைக்கும் பணிகளால் நேற்றும் அந்தப் பகுதியில் சச்சரவு ஏற்பட்டது.

சகல அனுமதிகளும் பெறப்பட்டு குறித்த ஹோட்டல் அமைக்கும் பணி இடம்பெற்று வந்த நிலையில் அப்பகுதி முஸ்லிம் மக்களின் எதிர்ப்பையடுத்து, யாழ்ப்பாண மாநகர சபையின் உத்தரவில் அந்தப் பணிகள் இடைநிறுத்தப்பட்டன.

இந்த நிலையில் யாழ். மாநகர சபையின் அறிவுறுத்தலையும் மீறி கட்டடம் கட்டும் பணிகள் நேற்றுக் காலை மீள ஆரம்பிக்கப்பட்டன. அதனையடுத்து அந்தப் பகுதி முஸ்லிம் மக்கள் மீண்டும் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர். இதனால் அங்கு இரண்டு தரப்புக்குமிடையே முரண்நிலை ஏற்பட்டது. இதனையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, இரு தரப்பையும் பொலிஸ் நிலையத்துக்கு வருமாறு அறிவுறுத்தியுள்ளார். அதனையடுத்து ஹோட்டல் அமைக்கும் பணிகள் இடைநிறுத்தப்பட்டதோடு, ஆர்ப்பாட்டக்காரர்களும் கலைந்து சென்றனர். (அ)

## இன்று நாளும் கோளும்

22.05.2018 செவ்வாய்க்கிழமை விளம்பி வருடம் வைகாசி மாதம் 07 ஆம் நாள்

அட்டமி ந.ப. 12.14 வரை | மகம் மு.ப. 11.58 வரை | குளிகை மு.ப. 12.00-01.30

இராகுகாலம் 03.00- 04.30 | சுபநேரம் காலை 07.30 - 08.30 | எமகண்டம் 09.00 - 10.30

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| அரோக்கியம் | உதவி | அலைச்சல் | ஆக்கம் | குழப்பம் | ஜெயம் | பரிசு | புகழ் | அமைதி | நன்மை | ஓய்வு | கவனம் |

# ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் 2020 இல் சிக்கல்



ஹட்டன், மே 22

தேசிய அரசாங்கத்தின் ஜனாதிபதியும், பிரதமரும் ஒற்றுமையாக இருந்து இன்னும் ஒன்றரை வருடங்களுக்கு மக்களுக்கு உரிய முறையில் சேவை செய்யத் தவறினால், எதிர்வரும் 2020 ஆம் ஆண்டு இருவரும் பிரச்சினையை எதிர்கொள்ள வேண்டியேற்படும் என்று அமைச்சர் பழனி திகாம்பரம் தெரிவித்துள்ளார்.

ஹட்டன் - பூல்பேங்க் தோட்டத்தில் மலைநாட்டுப் புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட வீடுகளைப் பயனாளிகளிடம் கையளிக்கும் நிகழ்வு, நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"கடந்த 2015ஆம் ஆண்டு நான் அமைச்சைப் பொறுப்பேற்றதில் இருந்து, மலையகத்தில் லயன் முறையை ஒழித்து, நவீன வசதிகளுடன் கிராமங்களையும் தனி வீடுகளையும் அமைக்க வேண்டுமென்ற வேலைத்திட்டத்தை மேற்கொண்டு வருகிறேன். இதற்கமைய இதுவரை 6 ஆயிரம் வீடுகள் கட்டப்பட்டுள்ளன. அவை அரசியல் தொழிற்சங்க பேதங்களின்றி மக்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

தோட்டத் தொழிலாளர்கள் சம்பள உயர்வு விடயத்தில் இந்த முறையும் ஏமாற்றப்படுவார்கள். கூட்டு ஒப்பந்தத்தில் கையொப்பமிடும் தொழிற்சங்கங்களும், கம்பனிகளும், நிச்சயம் மக்களை ஏமாற்றும். இப்போது தேயிலைக்கு நல்ல விலை கிடைத்துள்ளது. தோட்டங்களுக்கு நல்ல இலாபமும் கிடைத்து வருகின்றது. எனவே, நியாயமான சம்பள உயர்வு கிடைக்க வேண்டும் என்பதற்காக கம்பனிகளுக்கு எதிராகப் போராடி நியாயமான சம்பள உயர்வைப் பெற்றுக் கொடுப்பேன். சம்பளப் போராட்டத்திலும் தமது ஒற்றுமையை மக்கள் அனைவரும் வெளிப்படுத்த வேண்டும்." என்றும் அவர் தெரிவித்தார். (ஆ)

# சீரற்ற காலநிலை: 4 பேர் உயிரிழப்பு 13,314 பேர் பாதிப்பு

கொழும்பு, மே 22

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக 12 மாவட்டங்களில் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. இதனால், 4 பேர் உயிரிழந்துள்ளனர். 3 பேர் படுகாயமடைந்துள்ளனர். அந்த மாவட்டங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்து 438 குடும்பங்களைச் சேர்ந்த 13 ஆயிரத்து 314 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

நேற்று பிற்பகல் ஒரு மணியளவில் அந்த நிலையம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட 285 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 24 பேர், 20 தற்காலிக முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

வெள்ளம் மற்றும் மண்சரிவு அனர்த்தங்களால் ஒரு வீடு முழுமையாகவும், 173 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் என்பதால், அவ்வாறான பிரதேசங்களில் சூறாவளி வீசக்கூடும் என்றும் அந்த நிலையம் எதிர்வுகூறியுள்ளது. மின்னல் தாக்கத்தால் ஏற்படக்கூடிய அனர்த்தங்களைத் தவிர்ப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் மக்களுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.


இதேவேளை, ஏதாவது அனர்த்தம் ஏற்படபோகின்றது எனக் கண்டறிந்தால், அவைதொடர்பில் 117 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு உடனடியாக அறிவிக்குமாறும் அந்த நிலையம் அறிவுறுத்தி உள்ளது.

இந்தச் சீரற்ற வானிலையால் காலி மாவட்டமே கூடுதலாகப் பாதிக்கப்பட்டுள்ளது. அந்த மாவட்டத்தின் போபே பொத்தல, அக்மீமன உள்ளிட்ட பிரதேச செயலாளர் பிரிவுகளைச் சேர்ந்த ஆயிரத்து 960 குடும்பங்களைச் சேர்ந்த 7 ஆயிரத்து 742 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் அந்த நிலையம் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, நாட்டில் நிலவுகின்ற சீரற்ற வானிலை, இன்னும் சில நாட்களுக்கு நீடிக்கும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது. மேல், வடமேல், சப்ரகமுவ, ஊவா மற்றும் மத்திய ஆகிய மாகாணங்களிலும் காலி, மாத்தறை ஆகிய மாவட்டங்களிலும் 100 மில்லி மீற்றருக்கு மேல் மழை பெய்யுள்ளது.

இந்த நிலையில், தற்போது நிலவுகின்ற சீரற்ற வானிலை நீடிக்குமாயின், இரத்தினபுரி, களுத்துறை, காலி, கேகாலை, குருநாகல், பதுளை மற்றும் நுவரெலியா ஆகிய ஏழு மாவட்டங்களில் மண்சரிவு ஏற்படுவதற்கான அபாயம் தென்பட்டுள்ளது என்று தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் எதிர்வு கூறியுள்ளது. (ஆ)

# கடலரிப்பால் தேவாயலத்துக்கு பாதிப்பு!



அரச்சிக்கட்டுவ, மே 22

நாட்டில் ஏற்பட்டிருக்கும் மழையுடன்கூடிய காலநிலையால், அரச்சிக்கட்டுவப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட கடற்பகுதி கொந்தளிப்பாக உள்ளது. மேலும், இந்தப் பகுதியில் கடலரிப்பு ஆபத்தும் ஏற்பட்டுள்ளது. இதனால், இங்குள்ள கிறிஸ்தவ தேவாலயம் கடலரிப்பால் பாதிக்கப்பட்டுள்ளது எனப் பிரதேசவாசிகள் தெரிவித்துள்ளனர்.

இந்தக் கடலரிப்பில் இருந்து தேவாலயத்தைப் பாதுகாப்பதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும், பிரதேச மக்கள் மேற்கொண்டு வருகின்றனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஆ)

# ஹெரோயினுடன் ஒருவர் சிக்கினார்!

கொழும்பு, மே 22

கிரேன்பாஸ் - பர்கியூஷன் வீதிகளைப் பாலத்துக்கு அருகில், 250 கிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தக் கைது நேற்றுமுன் தினம் இடம்பெற்றுள்ளது.

ஹூனுப்பிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த 48 வயதுடைய நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ஆ)

# வெள்ளத்தில் சிக்கிய 15 பேர் நேற்று மீட்பு!

புத்தளம், மே 22

ரதஓயா பெருக்கெடுத்ததால் வெள்ளத்தில் சிக்குண்ட, மூன்று குடும்பங்களைச் சேர்ந்த 15 பேரை இராணுவத்தினர் நேற்றுக்காலை மீட்டுள்ளனர் என்று புத்தளம் அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் உதவிப் பணிப்பாளர் ஏ.எம்.ஆர்.என்.கே. அலஹகோன் தெரிவித்தார்.

கடந்த 15 ஆம் திகதியில் இருந்து தொடர்ச்சியாக பெய்த மழையின் காரணமாகவே, இந்த ஓயா பெருக்கெடுத்தது. மீட்கப்பட்டவர்கள் பாதுகாப்பான இடத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஆ)

# எரிபொருள் நிரப்பகத்தில் கொள்ளை



மாங்குளம், மே 22

மாங்குளம் ஒட்டுருத்தகுளம் பகுதியில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றில், கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை 3.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

வான் ஒன்றில் வருகை தந்த இருவர், எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இருந்த ஊழியருக்கு கூரிய ஆயுதம் ஒன்றைக் காட்டி மிரட்டிப் பணத்தைக் கொள்ளை அடித்துள்ளனர்.

இதன்போது, ஒரு இலட்சத்து 86 ஆயிரம் ரூபா பணம் கொள்ளை அடிக்கப்பட்டுள்ளது

இந்தச் சம்பவம் தொடர்பில் மாங்குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ஆ)

# ராஜிதவின் பட்டியலை குறைத்தாராம் மைத்திரி?



கொழும்பு, மே 22

உலக சுகாதார ஸ்தாபனத்தின் 70 ஆவது மாநாட்டில் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்னவுடன் பங்கேற்பதாக இருந்த பிரதிநிதிகள் பட்டியலின் எண்ணிக்கை, 20 இலிருந்து 14 ஆக குறைக்கப்பட்டதாகத் தகவல்கள் வெளியாகி உள்ளன.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இதுத்தொடர்பில் தீர்மானம் மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. சுகாதார அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட பட்டியலில் 6 பேரின் பெயர்களை ஜனாதிபதி நீக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாம் சுகாதார அமைச்சராக இருந்த காலத்தில் இவ்வாறு பெரிய குழுவொன்று இலங்கை சார்பில் இந்த மாநாட்டில் பங்கேற்கவில்லை என, ஜனாதிபதி தெரிவித்துள்ளதாகவும் அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சுகாதார பிரிவின் பிரதிப் பணிப்பாளர்களும் இந்த பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த விடயத்தை பிரதி சுகாதார அமைச்சரும் உறுதிப்படுத்தி உள்ளார். (ஆ)

# ஏற்றுமதியை அதிகரிக்க விவசாயக் கொள்கை

கொழும்பு, மே 22

ஏற்றுமதியை இலக்காகக் கொண்டு விவசாயக் கொள்கை ஒன்றை நடைமுறைப்படுத்துமாறு அமைச்சர் மஹிந்த அமரவீர அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

விவசாயிகளின் வருமானத்தை அதிகரிப்பதே இதன் இறுதி இலக்காகும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கண்ணொறுவ விவசாய தகவல் தொழில்நுட்ப திணைக்களத்தை நேற்றுமுன்தினம் நேரடியாகச் சென்று பார்வையிட்டதன் பின்னர் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே அமைச்சர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.



வறட்சி மற்றும் ஏனைய காரணங்களால் கடந்த சில வருடங்களாக நாட்டின் ஏற்றுமதி மற்றும் விவசாயப் பயிர்கள் மூலம் கிடைக்கும் வருமானம் ஐந்து சதவீதத்தால் குறைந்திருப்பதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார். (ஆ)

# பேதங்களின்றி ஒன்றிணைக!

## ஜனாதிபதி அறைகூவல்



கொழும்பு, மே 22

கிராமசக்தி மக்கள் இயக்கத்தின் நோக்கங்களை வெற்றிபெறச் செய்வதற்கு, அரசியல் பேதங்களின்றி அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கிராமசக்தி மக்கள் இயக்கத்தின் ஊவா மாகாண முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் நேற்று முற்பகல் பதுளை நூலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில், கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

ஊவா மாகாணத்தில் கிராமசக்தி மக்கள் இயக்கம் நடைமுறைப்படுத்தப்படும் விதம் மற்றும் அதன் முன்னேற்றம் குறித்து இதன்போது மீளாய்வு செய்யப்பட்டது.

அரசியல் பிரதிநிதிகள் மற்றும் அரச அதிகாரிகள் ஆகிய இரு தரப்பினரும் இதில் கலந்துகொண்டதுடன், ஊவா மாகாண மக்கள் முகங்கொடுத்துள்ள பிரச்சினைகள் குறித்து விரிவாகக் கவனம் செலுத்தப்பட்டது. இந்தப் பிரச்சினைகளை செவிமடுத்த ஜனாதிபதி சில பிரச்சினைகளுக்கு உடனடியாகத் தீர்வுகளை பெற்றுக்கொடுக்குமாறு அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்தார்.


பதுளை மாவட்டத்தில் வெலிமடை பிரதேச செயலாளர் பிரிவில் கொஸ்கனுவெல கிராம சேவகர் பிரிவில் மூடப்பட்டுள்ள பைகள் தயாரிக்கும் தொழிற்சாலையை கிராம சக்தி மக்கள் இயக்கத்தின் கீழ் உடனடியாக ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் ஜனாதிபதி பணித்தார்.

மேலும், மொனராகலை மாவட்டத்தில் விவசாய துறையை முன்னேற்றுவதற்குத் தேவையான நிகழ்ச்சித்திட்டங்கள் குறித்து ஜனாதிபதி அரசாங்க அதிகாரிகளின் விசேட கவனத்துக்குக் கொண்டு வந்தார்.

வறட்சி காரணமாகப் பாதிக்கப்பட்டு ஐந்து வருடங்களுக்கு பின்னர் போதுமான மழை கிடைக்கப்பெற்றுள்ள நிலையில், இந்த மழை நீரை உரிய முறையில் முகாமைத்துவம் செய்து எதிர்வரும் காலங்களில் விவசாய நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

ஆரம்பத்தில் ஆயிரம் கிராமங்களை உள்ளடக்கிய கிராமசக்தி மக்கள் இயக்கம், 2020 ஆம் ஆண்டளவில் 5 ஆயிரம் கிராமங்கள் வரை விரிவுபடுத்த திட்டமிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ஆ)

# மின்சாரத்தில் சிக்கி யானை உயிரிழப்பு



முல்லைத்தீவு, மே 22

முல்லைத்தீவு- விசுவமடு தேராவில் பகுதியில் காட்டுயானை ஒன்று மின்சார இணைப்பில் சிக்குண்டு, நேற்றுக் காலை உயிரிழந்துள்ளது.

இந்தப் பகுதியில் உள்ள 68 ஆவது படைப்பிரிவினர் தமது விவசாய நடவடிக்கைகளுக்காக மின்சார இணைப்பை வழங்கி இருந்தனர். இந்த நிலையில், இதில் சிக்கியே குறித்த யானை உயிரிழந்துள்ளது.

யானையின் உடலைப் பரிசோதனை மேற்கொண்ட வடபிராந்திய வனஜீவராசிகள் திணைக்களத்தின் கால்நடை மருத்துவ உத்தியோகத்தர் பா.கிரிதரன், "இந்த யானை மின்சாரத்தாக்குதலுக்கு உள்ளாகியே உயிரிழந்துள்ளது. இந்த யானைக்கு 35 வயது. இது இன்னும் நீண்ட காலம் வாழக்கூடியது. வடக்கில் இவ்வாறான இன யானைகள் மூன்றையே காட்டில் கண்டுள்ளேன்." என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஆ)

## 'அவசரகால உயிரிழப்பு' ஆசிய மாநாடு கொழும்பில்!

கொழும்பு, மே 22

அவசரகால உயிரிழப்புகள் தொடர்பிலான, முகாமைத்துவத்துக்கான பிராந்திய ஒத்துழைப்பு மற்றும் கொள்கை அபிவிருத்தி தொடர்பிலான மூன்றாவது ஆசிய மாநாட்டில் பங்கேற்பதற்காகப் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த தடயவியல் நிபுணர்கள் மற்றும் கொள்கை வகுப்பாளர்கள் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ளனர்.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் ஏற்பாட்டில் இன்றும் நாளையும் இந்த மாநாடு கொழும்பில் நடைபெற உள்ளது.


ஆப்கான், பங்களாதேஷ், இந்தியா, இந்தோனேசியா, நேபாளம், பாகிஸ்தான், கிழக்கு தீமோர், வியட்நாம் மற்றும் இலங்கையைச் சேர்ந்த தடயவியல் நிபுணர்கள் இந்த இரண்டு நாள் மாநாட்டில் பங்கேற்க உள்ளனர்.

பிராந்திய அனர்த்த முகாமைத்துவ முகவர் நிறுவனங்கள், செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் இந்தத் துறையில் பணியாற்றும் அமைப்புகளுடன் இணைந்து, வெளிநாட்டுப் பங்கேற்பாளர்கள் அமர்வில் பங்கேற்க உள்ளனர்.

அவசர நிலைமைகளின்போது உயிரிழப்புகளை முகாமைப்படுத்துவது தொடர்பிலான கொள்கைகையை வகுப்பதும், உத்திகளைக் கண்டறிவதுமே இந்த மாநாட்டின் நோக்கம் என்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் தெரிவித்துள்ளது. (ஆ)

# பந்தல் கூடாரம் வழங்கல்





கண்டாவளை kn 51 கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட, கிராம அபிவிருத்திச் சங்கத்துக்கு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனால் பந்தல் கூடாரம் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில், சுதந்திரக்கட்சியின் கரைச்சிப் பிரதேச சபை உறுப்பினர் ஐயம்பிள்ளை அசோக்குமார், உறுப்பினர் குமாரசாமி தர்மராசா , புண்ணை நீராவி வட்டாரப் பிரதிநிதி வேலாயுதம் கஜன், கிராமசேவையாளர், கிராம மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஆ)



# ஆர் சொன்னாலும் அது நன்மையான விசியம் எண்டால் கேப்பம்

முள்ளிவாய்க்கால் நினைவு நாளண்டைக்கு வட மாகாண சபையின்ரை கொடியை அரைக் கம்பதத்திலை பறக்கவிட்டவையெல்லே! அதுக்குச் சட்ட ஒழுங்கு அமைச்சர் மத்தும பண்டார "கட்டாயம் இதுக்கு எதிராச் சட்ட நடவடிக்கை எடுப்பம்" எண்டு சொல்லி இருக்கிறார்.

அதுக்கு "வட மாகாண சபையின்ரை கொடியை 'அரைக் கம்பத்திலை இல்லாட்டி முழுக் கம்பத்திலை இல்லாட்டித் தலைகீழாப் பறக்க விடுறது எங்கடை பிரச்சினை. சரி சட்ட நடவடிக்கை எடுங்கோ பாப்பம்" எண்டு எங்கடை சிவாஜிலிங்கம் சொல்லி இருக்கிறார்.

அதோடை வட மாகாண சபையின்ரை கல்வி அமைச்சருக்கும் எதிரா நடவடிக்கை எடுக்கவேணும் எண்டும் அமைச்சர் மத்தும பண்டார சொல்லி இருக்கிறார். அவருக்கு எதிரா நடவடிக்கை எடுக்கிறதுக்கு முன்னம் தாங்கள் கொஞ்சப்பேர் கூடிக் கதைக்க வேணுமாம். என்ன முசுப்பாத்தியோ தெரியாது. உப்பிடி எத்தினைக்குச் சட்ட நடவடிக்கை எடுப்பம் எண்டு சொல்லிக் கொண்டிருக்கினம். அவையும் அப்பிடிச் சொல்லுறதிலை பிழையில்லை. அவையும் தங்கடை இனத்தையும் சமாளிக்க வேணும் எல்லே? உப்பிடி ஏதேனும் சொல்லிக் கில்லிச் சமாளிக்கேலாட்டி பிக்குமார் குழம்புவினம். துவேசக்காரர் கொடி பிடிச்சுக் கொடும்பாவியும் எரிப்பினம். அது மட்டுமே மகிந்தா குடும்பமும் குழம்பும். அதை வைச்சே பெரிய அரசியல் நாடகமும் நடக்கும். ஏற்கனவே கோத்தா குழம்பீட்டார். ஐயோ முள்ளிவாயக்காலிலை விளக்கேற்றுறத்துக்கு விட்டிட்டீங்கள் இனிப் புலி திரும்பிவரப் போகுது. வந்தால் வீண் வில்லங்கந்தான். கண்டபடி சுடுவங்கள். இப்ப போய் வாற மாதிரி நிம்மதியா வெளியிலை போய்வ ரேலாது. மைத்திரி உதுக்கெல்லாம் இடங்குடுக்கக் கூடாது. உது சரியான அபாயம் எண்டுதன்னும் சுத்தி இருக்கிற ஆக்களுக்குத் தெரியாதோ? ஏன் அவை சொல்லேல்லை? எண்டு அவை கிடந்து பதகளிப்படுகினம்.

இப்பிடித்தான் எல்லா விசியங்களிலையும் மத்திய அரசாங்கத்தின்ரை ஆக்கள் தலையிட்டபடி. மத்திய அரசாங்கத்துக்குக் கீழை வாற பள்ளிக் கூடத்துக்கு ஒரு சட்டம். மாகாண சபைக்குக் கீழை வாற பள்ளிக் கூடத்துக்கு ஒரு சட்டம். அது மாதிரி எல்லா அரச நிறுவனங்களிலையும் ஒரு வேலைக்கு இரண்டு ஆள். மத்திய அரசாங்கத்தின்ரை ஒரு ஆள். மாகாண சபைக்கு இன்னுமொரு ஆள். ஒரு வேலைக்கு இரண்டு பேர். இரண்டு சம்பளம். நாடு எப்பிடி உருப்படும்? உது மாதிரி எல்லா விசியங்களுக்கும் தேவை இல்லாமல் கூடின ஆக்களை எடுத்து வைச்சுக் கொண்டிருக்கினம். சும்மா சம்பளம் போகுது. கேட்டால் சட்டம் பேசுவங்கள். அதாலை வாயை மூடிக்கொண்டு இருக்க வேண்டியதாயிருக்கு.

அபிவிருத்தி உத்தியோகத்தர் எண்டு கனக்க இருக்கினம். அவை தங்களை அபிவிருத்தி செய்து கொண்டிருக்கினம். சமூக சேவை உத்தியோகத்தர் எண்டு இருக்கினம். அவை தங்கடை தங்கடை குடும்பங்களுக்குச் சேவை செய்து கொண்டு இருக்கினம். சும்மா ஒரு வேலைக்கு நாலைஞ்சு பேர். கன எலியள் சேந்தால் புத்தெடுக்காது எண்டு சொல்லுறவை. அது மாதிரி உவையின்ரை கதை. வெளிநாட்டிலை ஒரு ஆளுக்கு நாலைஞ்சு வேலையளைக் குடுப்பினம். அது நாட்டுக்கு நல்ல காரியம். இஞ்சை ஒரு வேலைக்கு நாலைஞ்சு ஆக்கள். சிலது வேலை செய்யும். சிலது தலைக்குக் கையை முண்டு குடுத்துக் கொண்டு நல்ல நித்திரை கொள்ளும்.

அபிவிருத்தியைப் பற்றியும், உரிமைப் போராட்டத்தைப் பற்றியும் கதைக்கிறதுக்கு முன்னம், எங்களை நாங்கள் ஒருக்காச் சரி பாத்துக்கொள்ள வேணும். எங்களுக்கை சமூக அக்கறையையும், பொறுப்பையும் கொண்டு வர வேணும். வராட்டில் வேறை எதைப் பற்றியும் கதைச்சுப் பிரயோசனமில்லை. அப்பிடிக் கதைச்சுக் குடுத்தாலும் அது குரங்கின்ரை கையிலை பூமாலையைக் குடுத்தமாதிரித்தான் எண்டு முதலி சொல்லுறார். அவரும் அடிக்கடி வாசிக்கிறவர். அதாலை அவற்றை பேச்சையும் கேப்பம். என்ன?

- வில்லங்கம் விநாசி

# கடற்படை காணியை கையளிக்க வேண்டும் யாழ் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் முடிவு

யாழ். குருநகர் வலைத் தொழிற்சாலைக்கு அருகாமையில் உள்ள கடற்படை முகாம் அமைந்துள்ள காணியை கடற்றொழில் சம்மேளனத்திடம் ஒப்படைக்குமாறு யாழ். பிரதேச ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

யாழ். பிரதேச ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் நேற்று யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது. யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் பொன்னம்பலம் தயானந்தன் தலைமையில் நேற்று காலை 9 மணியளவில் ஆரம்பமாகிய இந்த கூட்டத்தில் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுவின் இணைத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா கலந்து கொண்டிருந்தார்.

இக்கூட்டத்தின் போது, காணி விடயம் தொடர்பாக ஆராயப்பட்ட போது, குருநகர் வலைத் தொழிற்சாலை (சீனோர்) பகுதியில் உள்ள காணியில் கடற்படையினர் முகாமிட்டு இருக்கின்றனர். அந்தக் காணியில் கடற்றொழிலாளர் எரிபொருள் நிரப்பும் தாங்கி உள்ளது. அந்த காணியை கடற்படையினரிடம் இருந்து விடுவிக்குமாறு குருநகர் கடற்றொழிலாளர் சம்மேளனத்தின் தலைவரினால் கூட்டத்தில் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இதையடுத்து கடற்படையினர் முகாமிட்டுள்ள அந்த காணியினை உடனடியாக விடுவிக்க யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் ஊடாக நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு இணைத்தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா தெரிவித்ததுடன், இதை தீர்மானமாக நிறைவேற்றுமாறும் கூட்டத்தில் தெரிவித்தார். (இ)

# தொடர்ச்சிகள்

## பல்கலை... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சமகால அரசியல் நிலமைகள் குறித்து யாழ். ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக வியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே சிவாஜிலிங்கம் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

"அரசியல்வாதிகள் வரவேண்டாம் எனக் கூறுவதற்கும் ஒரு முறை இருக்கின்றது. அந்த முறையை பல்கலைக்கழக மாணவர்கள் தவறவிட்டுள்ளனர். அரசியல்வாதிகள் வானத்திலிருந்து குதித்தவர்கள் அல்ல. இந்த மக்களிடமிருந்து வாக்குகளைப் பெற்ற மக்கள் பிரதிநிதிகள். அவர்களுக்கு கொடுக்கவேண்டிய கௌரவம் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும்.

ஆனால் அவ்வாறு கொடுக்கப்படவில்லை. முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தனியே பல்கலைகழக மாணவர்களால் நடத்தப்படவில்லை. வடமாகாணசபை உறுப்பினர்கள் 36 பேரும் தலா 7 ஆயிரம் ரூபா வீதம் பணம் வழங்கினார்கள். யாழ். வர்த்தக சங்கம் ஈகைச் சுடர்களுக்கான துணியை வழங்கியிருந்ததது. அதேபோல் ஈகைச் சுடர்களுக்கான கம்பிகளை முன்னாள் போராளிகள் வழங்கியிருந்தார்கள்.

அவ்வாறு பலர் பல்வேறு ஒத்துழைப்புக்களை வழங்கியிருந்த நிலையில் சகலருக்குமான கௌரவம் கொடுக்கப்பட்டிருக்கவேண்டும். மேலும் நினைவேந்தல் ஒழுங்கமைப்பிலும் பெரும் தவறுகள் நடந்துள்ளன. குறிப்பாக பிரதான சுடர் ஏற்றப்படும்போது அங்கே முறையான அறிவித்தல்கள் வழங்கப்படவில்லை.

உயிரிழந்தவர்களுக்கான மௌன அஞ்சலி செலுத்தப்படவில்லை. ஊடகங்கள் மற்றும் அரசியல்வாதிகளுக்கான ஒழுங்குகள் செய்யப்படவில்லை. இந்தப் பிழைகள் எல்லாம் திட்டமிட்டு செய்யப்பட்டனவா? என நாங்கள் கேள்வி எழுப்ப விரும்புகிறோம்.

மேலும் முள்ளிவாய்க்காலில் முல்லைத்தீவு மக்கள் மட்டும் சாகவில்லை வடக்கு, கிழக்கு மற்றும் மலையக மக்களும் கொல்லப்பட்டார்கள். ஆகவே வடக்கு, கிழக்கு மற்றும் மலையகம் சார்ந்து 9 பேர் முதலமைச்சருடன் இணைந்து ஈகைச் சுடரை ஏற்றவேண்டும் என நாங்கள் கேட்டிருந்தோம். ஆனால் அது நிராகரிக்கப்பட்டது.

இந்தச் சந்தர்ப்பதில் நான் கிழக்கு மாகாண மக்களிடம் மன்னிப்புக் கேட்க விரும்புகிறேன். கறுப்பு உடை அணிந்து கொண்டு முள்ளிவாய்க்கால் நினைவேந்தலில் நின்றதே பல்கலைக்கழக மாணவர்கள் செய்த சாதனையாகும்.

பல்கலைக்கழக மாணவர்கள் கண்ணாடிக்கு முன்னால் நின்று தம்முடைய செயற்பாடுகளை ஒரு தடவை சீர்தூக்கிப் பார்க்கவேண்டும். மேலும் இம் முறை பல்கலைக்கழக மாணவர்கள் செய்யவேண்டும் என கேட்டார்கள். சரி அடுத்த முறை பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் வேறு பீடத்திடம் செல்கிறது.

அந்த பீடத்தில் பெரும்பாலானவர்கள் சிங்கள மாணவர்கள். அப்போதும் இவர்களால் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் செய்ய இயலுமா?" எனவும் சிவாஜிலிங்கம் கேள்வி எழுப்பினார். (அ)

## யுத்த... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தடவை தமிழர்கள் மீது சிங்களம் போர்ப்பிரகடனம் செய்யமுயல்வது எவ்விதத்திலும் பொருத்தப்பாடற்றது.

தாயகப் பிரதேசத்தில் மே 18 க்குப் பின் புலிகளின் பெயரால் ஒற்றைச்சன்னம் கூடப் பாவிக்கப் படாத நிலையில் இலங்கையின் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்சவின் கருத்துக்கள் தாங்க முடியாத அவ நம்பிக்கையினையும் விசனத்தையும் ஏற்படுத்தியுள்ளது. அத்துடன் சிங்களம் காத்திரமான மீளிணக்கம் நோக்கி நகர்கின்றதா என்ற நியாயப்பாடான சந்தேகங்களையும் எமக்கு ஏற்படுத்தியுள்ளது

இடர்களோடும், தீர்க்கப்படாத அவலங்களோடும் பயணிக்கும் ஓர் தேசிய இனத்தின் மீது இப்படியான காழ்ப்புணர்ச்சிகளை ஏவி விடும் மனோநிலை சிங்கள எதேச்சாதிகாரத்திடம் கடந்த 4 தசாப்தங்களாக பீடித்திருக்கும் ஓர் இன அழிப்பு நோய் என நாம் கருதவேண்டியுள்ளது.

காலாதி காலமாகத் தொடரும் சிங்கள தேசத்தின் இன அழிப்புப் பொறிமுறையானது தமிழர்கள் மேல் கொட்டியுள்ள வக்கிரங்களின் மேல் அமர்ந்து கொண்டு ஒரு தேசிய இனத்தின் அவலங்களோடு பகடையாடுவதானது "தனித்தே பயணிக்க வேண்டும்" என்ற தவிர்க்கமுடியாத மனோபாவத்துக்கு எம்மைத் தள்ளி விடுமெனவும் எச்சரிக்கின்றோம்.

அப்படியான ஒரு சூழலில், நிலைமாறு கால நீதி, பொறுப்புக்கூறல் என்பவற்றில் இலங்கை கொண்டுள்ள உண்மையான முகத்தை அம்பலப்படுத்துவோடு தனது பௌத்த சிங்கள எதேச்சாதிகாரத்தைக் கொண்டு ஏற்கனவே இழைக்கப்பட் அநீதிகளுக்காக தமிழரிடம் மன்னிப்புக் கோர வேண்டிவரும்.

சாம்பல் மேடுகளில் தூங்கிக்கொண்டிருக்கின்ற பறவைகளை இராணுவ மனோநிலையில் அணுகுவது விபரீதமான விரும்பத்தகாத பேரிடர்களையே ஏற்படுத்தும் என்பதைச் சிங்களம் விளங்கிக்கொள்ள வேண்டும்" என்றும் அவர் அந்த ஊடக அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (அ)

## மைத்திரி... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குழிதோண்டி புதைத்திருப்பர் எனவும் கூறி அனுதாபத்தைப் பெற்றார்.

ஆயினும் காலம் செல்லச் செல்ல தனது சுய உருவத்தை வெளிக்காட்ட ஆரம்பித்துள்ளார் ஜனாதிபதி. உண்மையில் வடக்கு-கிழக்கு தமிழர்களின் எதிர்பார்ப்புக்கு எதிராக அவரது நடவடிக்கைள் அண்மைக்காலமாக அமைந்துள்ளன.

காணமல் ஆக்கப்பட்டோர் என யாரும் இல்லையாம், இரகசிய முகாம்கள் இல்லையாம், இராணுவம் போர்க் குற்றத்தில் ஈடுபடவில்லையாம், குற்றம் புரிந்த இராணுவத்தை காட்டிக் கொடுக்க மாட்டாராம், வடக்கில் உள்ள இரானுவ முகாம்களை அகற்றப் போவதில்லையாம் இவ்வாறு பலவிதமான கருத்துக்களை வெளிப்படுத்தி வருகின்றார். முன்னைய ஜனாதிபதிகளைப் போலவே தமிழ் மக்கள் விடயத்தில் மைத்திரியும் நடந்து கொள்கிறார்" என்றும் மாகாணசபை உறுப்பினர் குகதாஸ் தெரிவித்துள்ளார். (அ)

## மகிந்த... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடத்தவுள்ளனர் என்று அந்த அணியைச் சேர்ந்தவரான தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களும் அரசாங்கத்தை விட்டு விலகுவார்கள் என்றும், அவர் கூறியுள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஆலோசகராகவும், சிறிலங்கா பொதுஜன முன்னணியின் நிழல் தலைவராகவும் இருக்கும் மகிந்த ராஜபக்சவுடன், இரண்டு கட்சிகளும் இணைந்து பணியாற்றுவது குறித்துப் பேசவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், கூட்டு எதிரணியில் உள்ள தினேஸ் குணவர்த்தன, விமல் வீரவன்ச, உதய கம்மன்பில போன்றவர்களையும் தாம் சந்தித்துப் பேசவிருப்பதாகவும், தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார். (அ)

## முடிந்தால்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தினத்தன்று வடமாகாணசபையின் கொடியை அரைக் கம்பத்தில் பறக்க விடப்பட்டமை தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும் என சட்டம் ஒழுங்கு அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார வெளியிட்ட கருத்துக்குப் பதிலடியாகவே , சிவாஜிலிங்கம் இவ்வாறு கூறியுள்ளார்.

" வடமாகாணசபையின் கொடியை அரை கம்பத்தில் பறக்க விடுவதும், தலைகீழாகப் பறக்க விடு வதும் எங்களுடைய பிரச்சினை. அதனை நாங்கள் பார்த்துக் கொள்வோம். அதேபோல் மாகாணப் பாடசாலைகளில் கொடியை அரைக்கம்பத்தில் பறக்க விடுமாறும் கேட்டோம். அதுவும் எங்களின் பிரச்சினை. அது தெரியாமல் கருத்துக் கூறியுள்ள, சட்டம் ஒழுங்கு அமைச்சர், முடிந்தால் எம்மீது நடவடிக்கை எடுக்கட்டும் பார்க்கலாம்" என்றும் அவர் தெரிவித்தார். (அ)

## இன்னொரு... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசியல்வாதிகள் அமைதியாக இருந்தனர்.

பலர் விடுதலைப் புலிகளுக்காக வேலை செய்தனர். நாங்கள் போரை முடிவுக்குக் கொண்டு வந்ததும், அந்த அரசியல்வாதிகள் கதாநாயகர்கள் ஆகி விட்டனர்.

எல்லா இன, மதங்களையும் சேர்ந்த மக்கள், முப்படையினரின் அர்ப்பணிப்பினால் தான் தீவிரவாதத்தின் பிடியில் இருந்து விடுவிக்கப்பட்டதை மறந்து விடக் கூடாது" என்றும் அவர் கூறியுள்ளார். (அ)

## தெற்கில்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதிக்கப்பட்டுள்ளனர். பல பிரதேசங்களில் மண்சரிவு அபாய எச்சரிக்கையும் விடப்பட்டுள்ளது.

வெள்ள அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களை மீட்கும் நடவடிக்கைகள் முப்படையினராலும் முன்னெடுக்கப்பட்டு வரப்படுகிறது.

வெள்ள அனர்த்தத்தை எதிர்கொண்ட எவரும் அல்லது குழுக்கள் அது தொடர்பான தகவல்களை 117 என்ற தொலைபேசி இலக்கத்தின் ஊடாக இடர்முகாமைத்துவ மத்திய நிலையத்திற்கு தெரிவிக்க முடியும் என்று மத்திய இடர்முகாமைத்துவ நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி அறிவித்துள்ளார்.

இதேவேளை, இயற்கை அனர்த்தத்தால் பாதிப்புற்றோரை மீட்கவும், நிவாரண உதவிகளை வழங்கவும் நேற்றிரவு ஜனாதிபதி மைத்திரிபால தலைமையிலும், பிரதமர் ரணில் தலைமையிலும் இரு ஆலோசனைக் கூட்டங்கள் நடைபெற்று, அதன் அடிப்படையில் மீட்புப் பணிகளை முன்னெடுக்கும் உத்தரவுகள் வழங்கப்பட்டுள்ளன.(அ)

(இது தொடர்பான இன்னும் செய்திகள் 04 ஆம் பக்கத்தில்)

## தீவு... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தநிலையில், அம்பாந்தோட்டைத் துறைமுகத்துக்கு வெளியே அமைக்கப்பட்ட செயற்கைத் தீவுக்கு சீனா இப்போது உரிமை கோரி வருகிறது.

மகிந்த ராஜபக்ச ஆட்சிக்காலத்தில் அம்பாந்தோட்டை துறைமுகத்தை அமைப்பதற்காக நிலப்பரப்பில் இருந்து வெட்டியெடுக்கப்பட்ட மண்ணைக் கொண்டு, துறைமுகத்துக்கு வெளியே செயற்கைத் தீவு ஒன்று அமைக்கப்பட்டது.

50 மில்லியன் டொலர் செலவில் அமைக்கப்பட்ட இந்தத் தீவு 110 ஹெக்ரெயர் பரப்பளவைக் கொண்டது. இதனை சுற்றுலாத்துறை அபிவிருத்திக்காக பயன்படுத்த அரசாங்கம் திட்டமிட்டிருந்தது.

இந்தநிலையிலேயே, அம்பாந்தோட்டை துறைமுக உடன்பாட்டுக்குள், இந்த தீவும் அடங்கியிருப்பதாகவும், அதனைத் தம்மிடம் ஒப்படைக்குமாறும் சீனா வலியுறுத்தி வருகிறது.

அத்துடன், தீவைத் தம்மிடம் கையளிக்கும் வரை, அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கான அடுத்தகட்ட தவணைக் கொடுப்பனவை வழங்க முடியாது என்றும் அடம் பிடித்து வருகிறது.

சீனாவின் அழுத்தங்களுக்கு அடிபணிந்து இந்தத் தீவை ஒப்படைப்பதாயின் தென் மாகாணசபையின் ஒப்புதலை அரசாங்கம் பெற வேண்டும்.

ஆனால் தென் மாகாணசபை இதனை கடுமையாக எதிர்த்து வருவதாகவும் அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது. (அ)

## லண்டனில்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுமுன்தினம் அதிகாலை 3.30 மணியளவில் மிட்செம் பகுதியில் உள்ள வீதியில் அருணேஸ் தங்கராஜா(வயது- 28 ) என்ற இளைஞன் வெட்டுக்காயங்களுடன் கிடந்தார்.

அவரை மீட்டு உயிரைக் காப்பாற்ற பொலிஸார் முயற்சித்த போதும், அவர் அந்த இடத்திலேயே மரணமானார்.

ஸ்கொட்லன்ட்யார்ட் பொலிஸார், இந்தக் கொலை தொடர்பான தடயவியல் ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தக் கொலை தொடர்பாக 44 வயதுடைய சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவர் தெற்கு லண்டனில் உள்ள பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு செல்லப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளார். (அ)

## மதுபான... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேலை செய்யும் ஏழாலை பகுதியை சேர்ந்த கௌரீசன் (38 -வயது) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர். இவரின் உயிரிழப்புக்கான காரணம் எதுவும் இதுவரை தெரியவரவில்லை.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரிணைகளை மேற்கொண்டுள்ளனர். சடலம் பிரேத பரிசோதனைக்கென யாழ் .போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (அ)

## மூடாவிட்டால்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆரம்பமான இந்த ஆர்ப்பாட்டத்தில் நூற்றுக்கணக்கானோர் பங்கேற்றனர்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் தென்மராட்சி பிரதேச செயலகத்துக்குச் சென்று மனுவொன்றையும் கையளித்தனர்.

"சாவகச்சேரி மாட்டு இறைச்சி கொல்களம் ஒரு மாத காலத்துக்குள் மூடப்படவேண்டும். இல்லையேல் தென்மராட்சி பிரதேச செயலகத்தை முற்றுகையிடுவோம்" என்று சிவசேனா அமைப்பின் தலைவர் மறவன்புலோ சச்சிதானந்தன், பிரதேச செயலரிடம் தெரிவித்தார்.

தொடர்ந்து சாவகச்சேரி நகர சபைக்குச் சென்ற ஆர்ப்பாட்டக்காரர்கள், நகர சபைச் உப தவிசாளரிடமும் மனுவொன்றைக் கையளித்த பின்னர் கலைந்தனர். (அ)



# ட்ரம்ப் – மூன் ஜே தொலைபேசியில் பேச்சு!

சியோல், மே 22

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், தென் கொரிய ஜனாதிபதி மூன் ஜே இன்னை நேற்றுமுன்தினம் தொலைபேசியில் அழைத்துப் பேச்சு நடத்தி உள்ளார்.

பெரும் எதிர்பார்ப்புகளுக்கு இடையே சிங்கப்பூரில் அடுத்த மாதம் 12 ஆம் திகதி அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பும், வட கொரிய ஜனாதிபதி கிம் ஜோங் உன்னும் சந்தித்துப் பேசுவதாக அறிவிக்கப்பட்டது. அதற்கான ஏற்பாடுகள் நடந்து வந்தன.

இதற்கிடையே தென் கொரிய ஜனாதிபதி மூன் ஜே இன்னை ஒரு முறையும், சீன ஜனாதிபதி ஜின்பிங்கை இரு முறையும் வடகொரிய ஜனாதிபதி கிம் ஜோங் உன் சந்தித்துப் பேசினார். ட்ரம்புடனான சந்திப்புக் குறித்தும் அவர் இணக்கமான கருத்துக்களையே வெளியிட்டு வந்தார்.

ஆனால், திடீரென வடகொரியாவின் போக்கில் மாறுதல் ஏற்பட்டது. ஒருதலைப் பட்சமாக அணு ஆயுதங்களை கைவிடுமாறு அமெரிக்கா நிர்ப்பந்திப்பதாக வடகொரியா கருதுகிறது. அது மட்டுமின்றி ட்ரம்புடனான பேச்சுவார்த்தையை இரத்துச் செய்யவும் தயங்கப்போவது இல்லை என்கிற ரீதியில் அந்த நாடு கருத்து தெரிவித்தது.

ட்ரம்பும் தன் பங்குக்கு, “கிம் ஜோங் உன் அணு ஆயுதங்களைக் கைவிட்டால், அவர் ஆட்சி அதிகாரத்தில் தொடர்வார். ஆனால், அவர் அமெரிக்காவுடன் அதற்காக ஒப்பந்தம் செய்துகொள்ளாவிடில் வடகொரியா அழிவைச் சந்திக்க வேண்டி வரும்” என்றார்.

இந்த நிலையில், தென் கொரிய ஜனாதிபதி மூன் ஜே இன், அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் ஆகியோருக்கு இடையில் இந்தப் பேச்சுவார்த்தை இடம்பெற்றுள்ளது. அதன் போது, சிங்கப்பூரில் நடக்க உள்ள பேச்சுவார்த்தையை இரத்துச் செய்யப்போவதாக வடகொரியா விடுத்த மிரட்டல் தொடர்பில் முக்கிய ஆலோசனை நடத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பில் தென்கொரிய ஜனாதிபதி மூன் ஜே இன்னின் அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் “சமீப காலமாக வடகொரியா எடுத்து வரும் நடவடிக்கைகள் பற்றி ட்ரம்பும், மூன் ஜே இன்னும் கருத்துப் பரிமாற்றம் செய்து கொண்டனர்” எனக் கூறப்பட்டுள்ளது. (ஆ)

# 12 ஆண்டுகளில் பிறந்த முதல் குழந்தை!

பிரேசில், மே 22

குழந்தைப் பிறப்புக்குத் தடைவிதிக்கப்பட்டுள்ள பிரேசிலிய தீவு ஒன்றில், கடந்த 12 ஆண்டுகளுக்குப் பிறகு முதல் முறையாகப் பிறந்துள்ள புதிய குழந்தையை மக்கள் கொண்டாடி வருகின்றனர்.

பிரேசிலின் நட்டால் நகரத்தில் இருந்து சுமார் 370 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள, 3 ஆயிரம் மக்கள் மட்டுமே வசிக்கும் இந்தத்தீவில், மக்கள்தொகையைக் கட்டுப்படுத்துவதற்காக, குழந்தைப் பிறப்புக்குத் தடை விதிக்கப்பட்டிருந்தது. இந்த நிலையிலேயே குறித்த தடை நீக்கப்பட்ட பின்னர், அங்கு 12 ஆண்டுகளுக்குப் பிறகு குழந்தை பிறந்துள்ளது. (ஆ)



# ட்ரக் விபத்து: 11 பேர் சாவு!

## இந்தோனேசியாவில் துயரம்

ஜகார்த்தா, மே 22

இந்தோனேசியா நாட்டின் மத்திய ஜாவா பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ட்ரக் விபத்தில், 11 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

மத்திய ஜாவா மாகாணத்துக்கு உட்பட்ட ப்ரிபெஸ் மாவட்டத்தில் உள்ள மலைப்பகுதியில் சீனி எற்றிக்கொண்டு ஜகார்த்தா நகரை நோக்கி சென்ற ட்ரக்கே, இவ்வாறு விபத்துக்குள்ளானது.

மலைப்பகுதியில் இருந்து இறங்கிக் கொண்டிருந்த குறித்த ட்ரக் வேகக் கட்டுப்பாட்டை இழந்து, அருகில் இருந்த குடியிருப்புப் பகுதிக்குள் புகுந்தது.

அங்கு வசித்த 11 பேர் உயிரிழந்தனர். மேலும் ஒரு கார், 13 மோட்டார்சைக்கிள்கள் மற்றும் 7 வீடுகள் என்பன இந்த விபத்தில் சேதமடைந்துள்ளன.

கடந்த பெப்ரவரி மாதம் மேற்கு ஜாவா பகுதியில் நிகழ்ந்த இதுபோன்ற விபத்தில், 27 பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (ஆ)

# கேரளாவை மிரட்டும் நிபா: 2 வாரங்களில் 15 பேர் சாவு!

கோழிக்கோடு, மே 22

கேரள மாநிலத்தில் நிபா வைரஸ் காய்ச்சலுக்கு உள்ளாகி, கடந்த இரண்டு வாரங்களில் 15 பேர் உயிரிழந்திருள்ளனர் எனத் தகவல் வெளியாகி உள்ளது.

கேரள மாநிலத்தில் கடந்த சில தினங்களாக அரிய வகை நிபா வைரஸ் பொது மக்களை அச்சுறுத்தி வருகிறது. உயிருக்கு ஆபத்து ஏற்படுத்தும் இந்த வைரஸ் தாக்குதல் கோழிக்கோடு மற்றும் மலப்புரம் மாவட்டங்களில் பரவி உள்ளமையால் பொதுமக்கள் பீதி அடைந்துள்ளனர்.

இந்த வைரஸ் தாக்குதலுக்கு கடந்த இரண்டு வாரங்களில் மட்டும் ஒரு செவிலியர் உட்பட 15 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும், சிலர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

வெளவால்களால் பரவும் இந்த நிபா வைரஸ், மனிதர்கள் மற்றும் விலங்குகளைத் தாக்குகிறது. இந்த நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு கடுமையான மூளைக்காய்ச்சல் மற்றும் மூளைச்சாவு ஏற்படும் என்றும் வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர். (ஆ)



# அரசியலில் களமிறங்கும் ஸ்ரீரெட்டி!

ஆந்திரா, மே 22

பட வாய்ப்புக்காக நடிகைகளை படுக்கைக்கு அழைக்கும் வழக்கம் இருப்பதாகவும், தானும் பலரால் பாதிக்கப்பட்டதாகவும் கூறிப் பரபரப்பை ஏற்படுத்திய நடிகை ஸ்ரீரெட்டி விரைவில் அரசியலில் ஈடுபட இருப்பதாகக் கூறப்படுகிறது.

தெலுங்கு நடிகை ஸ்ரீரெட்டியின் இந்த குற்றச்சாட்டால் தெலுங்கு திரையுலகில் பரபரப்பு ஏற்பட்டது.

ஸ்ரீ லீக்ஸ் முகநூல் பக்கத்தில் செக்ஸ் தொல்லை கொடுத்தவர்கள் என்று இயக்குநர் சேகர் கம்முலு, தயாரிப்பாளர் கோனா வெங்கட், நடிகர் ராணாவின் தம்பி அபிராம், நடிகர் நானி என்று தொடர்ந்து பெயர்களை வெளியிட்டார்.

தெலுங்கு நடிகர் சங்கம் ஸ்ரீரெட்டியை நீக்கி வைத்து, அவருடன் யாரும் நடிக்க கூடாது என்று தடை போட்டது. இதை எதிர்த்து அரைநிர்வாண போராட்டம் நடத்திப் பரபரப்பை ஏற்படுத்தினார். ஸ்ரீரெட்டிக்கு ஆதரவாக மனித உரிமை ஆணையம், மகளிர் சங்கங்கள் இறங்கியதால் அவர் மீதான தடையை நடிகர் சங்கம் நீக்கியது.

இந்த நிலையில், சமூக சேவை பணிகளில் ஸ்ரீரெட்டி தீவிரமாக ஈடுபடத் தொடங்கி உள்ளார். பெண்கள் அமைப்புகள் நடத்தும் நிகழ்ச்சிகளில் பங்கேற்று வருகிறார். பெண்களுக்கு எதிரான வன்முறைகளைக் கண்டித்து நடைபெறும் கருத்தரங்குகளிலும் பேசுகிறார்.

ஆந்திரா ஸ்ரீசைலம் பகுதியில் உள்ள கண்மாயில் மகாத்மா காந்தியின் 100 நாள் வேலைவாய்ப்பு திட்டத்தில் கிராமப்புறப் பெண்கள் பலர், வேலை செய்து வந்தனர். அந்த வேலையை திடீரென்று நிறுத்தி அவர்களை வீட்டுக்கு அனுப்பி விட்டனர். இதைக் கண்டித்து அந்தப் பெண்களுடன் சேர்ந்து ஸ்ரீரெட்டி போராட்டத்தில் ஈடுபட்டார். விரைவில் அரசியல் கட்சி ஒன்றில் ஸ்ரீரெட்டி இணையவிருப்பதாகத் தகவல் வெளியாகி உள்ளது. (ஆ)

# தமிழுக்கு ‘நோ’ சொன்ன டாப்ஸி!



மும்பை, மே 22

தமிழில் முக்கிய கதாநாயகியாக வலம் வந்த நடிகை டாப்ஸி, தற்போது ஹிந்திப் படங்களில் பிஸியாக உள்ளார். இதனால், அவர் தமிழ் வாய்ப்புகளை மறுத்து வருகிறார்.

தமிழை மறந்து முழு ஹிந்தி நடிகையாக மாறிவிட்ட டாப்ஸி, ‘நாம் சபானா’ படத்துக்குக் கிடைத்த வரவேற்புக்குப் பிறகு ஆக்‌ஷன் வேடங்களிலும் நடிக்கத் தொடங்கி இருக்கிறார்.

தற்போது ‘பட்வா’ என்ற படத்தில் கதையின் நாயகியாக நடிக்கும் டாப்ஸி, அடுத்து அமிதாப்புடன் ஒரு படத்தில் நடிக்க இருக்கிறார். சுஜாய் கோஷ் இயக்கும் இந்தப் படம் த்ரில்லராக உருவாகிறது. டாப்ஸி ஏற்கனவே ‘பிங்க்’ படத்தில் அமிதாப்புடன் நடித்திருந்தார்.

இந்த நிலையில், வரிசையாக ஹிந்திப் பட வாய்ப்புகள் குவிவதால், அவர் தமிழ் படங்களில் நடிக்க வாய்ப்பு வந்தாலும் மறுத்துவிடுகிறார்.

ஹிந்தியில் மட்டும் டாப்ஸியின் கையில் 4 படங்கள் இருக்கின்றன. இதனால், சமீபத்தில் தமிழ் இயக்குநர் ஒருவர் அணுகியதற்கு கதை கேட்கவே மறுத்துவிட்டாராம் டாப்ஸி. (ஆ)

# ராஜீவ் காந்தியின் 27ஆவது நினைவு!



புதுடில்லி, மே 22

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் 27 ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு வீர்பூமியில் உள்ள அவரது நினைவிடத்தில், காங்கிரஸ் கட்சியின் தலைவர் ராகுல் காந்தி, சகோதரி பிரியங்கா காந்தி மற்றும் அவரது கணவர் ரோபர்ட் வத்ரா ஆகியோர் அஞ்சலி செலுத்தினர்.

முன்னதாக, காங்கிரஸின் முன்னாள் தலைவர் சோனியா காந்தி, முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங், முன்னாள் குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி ஆகியோரும் அஞ்சலி செலுத்தினர்.

மேலும், காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர்களான மல்லிகார்ஜூன் கார்கே, சுஷில் குமார் ஷிண்டே, பொதுமக்கள், தொண்டர்கள் ஆகியோரும் அஞ்சலி செலுத்தினர். (ஆ)

Sri Lanka Cricket

# நான்கு முனைப் போட்டி

கொழும்பு, மே 22

இலங்கை கிரிக்கெட் சபைத் தலைவர் பதவிக்காக நான்கு பேர் வேட்பு மனுத் தாக்கல் செய்துள்ளனர்.

எதிர்வரும் 31ஆம் திகதி இலங்கை கிரிக்கெட் சபைத் தேர்தல் நடைபெறவுள்ளது.

இதற்கமைய, திலங்க சுமதிபால, ஜயந்த தர்மதாச, மொஹன் டி சில்வா மற்றும் நிஷாந்த ரணதுங்க ஆகியோர் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்துள்ளனர்.

நால்வருடைய பெயர்களும், இலங்கையிலுள்ள கிரிக்கெட் கழகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் தொடர்பில் ஏதேனும் அதிருப்திகள் காணப்படுமாயின் இன்று செவ்வாய்க்கிழமைக்குள் முன்வைக்குமாறும் இலங்கை கிரிக்கெட் சபைஅறிவித்துள்ளது.

ஐந்து பேர் கொண்ட தேர்தல் குழு கடந்த சனிக்கிழமை நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# தங்கக் காலணி மெஸ்ஸிக்கு!




ஸ்பெய்ன், மே 22

லா லிகா தொடரில் பார்சிலோனாவுக்காக 34 கோல்கள் அடித்து தங்கக் காலணி விருதை ஐந்தாவது முறையாகத் தட்டிச் சென்றுள்ளார் மெஸ்ஸி.

ஐரோப்பாக் கண்டத்தில் உள்ள ஒவ்வொரு நாட்டிலும் உதைபந்து லீக் தொடர் ஆண்டுதோறும் நடைபெறும். இங்கிலாந்தில் இங்கிலீஷ் பிரீமியர் லீக், ஸ்பெயினில் லா லிகா, பிரான்ஸில் லீக் 1, இத்தாலியில் செரி ஏ, ஜெர்மனியில் பண்டேஸ்லிகா போன்ற முன்னணி உதைபந்து தொடர் ஆட்டங்கள் நடைபெறுகின்றன.

இந்த உதைபந்து லீக்கில் அதிக கோல்கள் அடிக்கும் வீரருக்கு ஆண்டுதோறும் தங்கக் காலணி வழங்கப்படும். அதன்படி இந்த வருடம் லா லிகா தொடரில் பார்சிலோனா அணிக்காக விளையாடும் மெஸ்ஸி தங்கக் காலணியைத் தட்டிச் சென்றுள்ளார். மெஸ்சி இந்த முறை 34 கோல்கள் அடித்துள்ளார். அத்துடன் 25 கோல்கள் அடிக்க துணைபுரிந்துள்ளார்.

மெஸ்ஸி ஏற்கனவே, கடந்த 2010, 2012 , 2013, 2017 ஆம் ஆண்டுகளில் இந்த விருதை கைப்பற்றியுள்ளார். இங்கிலீஷ் பிரீமியர் லீக்கில் லிவர்பூல் அணிக்காக விளையாடும் முகமது சாலா 32 கோல்கள் அடித்து 2 ஆவது இடம்பிடித்துள்ளார். டோட்டன்ஹாம் வீரர் ஹரி கேன் 30 கோல்கள் அடித்து 3 ஆவது இடத்தில் உள்ளார். ரியல் மாட்ரிட் வீரர் ரொனால்டோ 26 கோல்கள் அடித்து 8 ஆவது இடத்தையே பிடித்தார். (அ)

# இணைந்த கரங்களின் இரட்டைப் பிடியெடுப்பு




புதுடெல்லி, மே 22

மும்பை, டெல்லி இடையிலான போட்டியில், மக்ஸ்வெல் மற்றும் போல்ட் இருவரும் இணைந்து இரண்டு பிடியெடுப்புகளை நிகழ்த்தி அனைவரையும் ஆச்சரியப்படுத்தினர். ஐபிஎல் தொடரின் 55-வது லீக் போட்டி நேற்று முன் தினம் டெல்லியில் நடைபெற்றது. இதில் டெல்லி டேர்டெவில்ஸ், மும்பை இந்தியன்ஸ் அணிகள் மோதின. இதில், மும்பை அணி துடுப்பெடுத்தாடியபோது, சந்தீப் லமிசானே வீசிய பந்தை பொலார்ட் சிக்ஸருக்கு அடிக்க முயன்றார். அந்தப் பந்தை டெல்லி அணி வீரர் மக்ஸ்வெல் ஓடிச் சென்று எல்லைக் கோட்டருகே பிடித்தார். ஆயினும் ஓடிய வேகத்தால் அவரால் நிற்க முடியவில்லை. எனவே அவர் பந்தை அருகிலிருந்த சக வீரரான போல்டிடம் எறிந்து விட்டு, எல்லைக் கோட்டைத் தாண்டினார். மக்ஸ்வெல் எறிந்த பந்தை போல்ட் நழுவ விடாது பிடித்து பொலார்ட்டை ஆட்டமிழக்கச் செய்தார்.

அதன் பின்னர் மும்பை அணியின் கப்டன் ரோகித் சர்மாவையும் அதேபோல் மீண்டுமொருமுறை மேக்ஸ்வெல் மற்றும் போல்ட் இருவரும் ஒன்று சேர்ந்து பிடியெடுத்து ஆட்டமிழக்கச் செய்தனர். இது போல இருவர் இணைந்து பிடியெடுப்புக்களை நிகழ்த்தி இருந்தாலும், இப்படி ஒரே போட்டியில், இரு தடவைகள் , ஒரே வீரர்கள் இரட்டைப் பிடியெடுப்பை எடுத்தமை இதுவே முதல் தடவை என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# நடால் சம்பியன்



இத்தாலி, மே 22

இத்தாலி ஓபன் ரென்னிஸ் தொடரின் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் ரபேல் நடால் சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றினார்.

இத்தாலி ஓபன் ரென்னிஸ் போட்டிகள் ரோம் நகரில் நடைபெற்றன. நேற்றுமுன்தினம் இறுதிச்சுற்று ஆட்டங்கள் நடைபெற்றன. ஆண்கள் ஒற்றையர் பிரிவின் இறுதிப் போட்டியில், உலகின் முன்னணி வீரரான ஸ்பெயினின் ரபேல் நடால் மற்றும் ஜேர்மனியின் அலெக்சாண்டர் ஸ்வேரேவ் ஆகியோர் மோதினர்.

விறுவிறுப்பான நடைபெற்ற இந்த ஆட்டத்தில், ரபேல் நடால் முதல் செற்றை 6-1 என்ற கணக்கில் கைப்பற்றினார். தொடர்ந்து நடந்த இரண்டாவது செற்றை ஸ்வரேவ் 6-1 என்ற கணக்கில் கைப்பற்றினார். இருவரும் சமநிலை பெற்றதால் ஆட்டத்தில் விறுவிறுப்பு அதிகரித்தது. இந்நிலையில், இறுதி செற்றை ரபேல் நடால் 6-3 என்ற கணக்கில் கைப்பற்றி அபார வெற்றி பெற்றார். இதன்மூலம், சம்பியன் பட்டத்தை அவர் தட்டிச் சென்றார். உலகத் தரவரிசையில் ரபேல் நடால் 2 ஆவது இடத்திலும், அவரிடம் தோல்வியடைந்த அலெக்சாண்டர் ஸ்வேரேவ் 3 ஆவது இடத்திலும் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# வெல்லவே வருகிறேன்

நியூயோர்க், மே 22

நீண்ட இடைவெளிக்குப் பிறகு மீண்டும் பிரெஞ்ச் ஓபனுக்கு திரும்புவது கிண்ணத்தை வெல்வதற்குதான் என செரீனா வில்லியம்ஸ் கூறியுள்ளார். உலகின் தலைசிறந்த ரென்னிஸ் வீராங்கனையாகத் திகழ்ந்து வருபவர் செரீனா வில்லியம்ஸ். இதுவரை 23 கிராண்ட்ஸ்லாம் பட்டத்தை வென்று சாதனை படைத்துள்ளார். இன்னும் ஒருமுறை கிராண்ட்ஸ்லாம் பட்டத்தை வென்றால், பெண்கள் ஒற்றையர் பிரிவில் அதிக பதக்கம் வென்ற மார்கரெட் கோர்ட் சாதனையை அவர் சமன் செய்வார்.

கடந்த ஆண்டு அவுஸ்திரேலியா கிராண்ட்ஸ்லாம் பட்டத்தைக் கைப்பற்றினார். அப்போது செரீனா கர்ப்பிணியாக இருந்தார். இதனால் தொடர்ந்து அவர் விளையாடவில்லை. கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் இவருக்கு அலெக்சிஸ் ஒலிம்பியா என்ற பெண் குழந்தை பிறந்தது.

குழந்தை பிறந்த நான்கு மாதம் கழித்து மீண்டும் ரென்னிஸ் விளையாட களம் இறங்கினார் செரீனா. ஆனால் அவரால் சிறப்பாகச் செயற்பட முடியவில்லை. இந்நிலையில் வருகிற 27 ஆம் திகதி முதல் ஜூன் 10ஆம் திகதி வரை நடைபெறும் பிரெஞ்ச் ஓபனில் விளையாட அவர் முடிவு செய்துள்ளார்.

"நான் வெறுமனே திரும்பவும் ரென்னிஸ்க்கு வரவேண்டும் என்பதற்காகத் திரும்பவில்லை. வெற்றி பெறுவதற்காகவே திரும்ப வந்திருக்கிறேன்" என்று அவர் கூறியுள்ளார். (அ)



இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 22.05.2018 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.